# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

(கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)

## மானியக் கோரிக்கை எண் . 13

# அறிவிப்புகள்

## 2019 - 2020


**இரா. காமராஜ்**

உணவு மற்றும் நுகர்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

**1. டெல்டா மற்றும் பிற மாவட்டங்களில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு நேரடி நெல் கொள்முதல் நிலைய வாடகை கட்டிடங்களுக்கு பதிலாக 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கீரிட் தளத்துடன் கூடிய 25 நேரடி நெல் கொள்முதல் நிலைய சொந்தக் கட்டிடங்கள் கட்டப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வாடகையில் செயல்படும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை தவிர்க்கும் வகையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டிடம் கட்டித்தர ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கும் 100 மெ.டன் கொள்ளளவு நெல்லினை சேமிக்கும் வகையில், நெல் உலர்களம், நெல்தூற்றும் இயந்திரம், ஈரப்பதமானி மற்றும் மின்னணு தராசு போன்ற வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டிடம் கட்ட அரசால்

அறிவிக்கப்பட்டு படிப்படியாக திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் 25 எண்ணிக்கையிலான சிமெண்ட் கான்கீரிட் தளத்துடன் (RCC Roof) கூடிய நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

**2. டெல்டா மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் பயன்பாட்டிற்காக 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 100 எண்ணிக்கையிலான நெல் உலர்த்தும் களங்கள் அமைக்கப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** டெல்டா மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி அவர்களால் பயிரிடப்படும் நெல் மற்றும் பருப்பு வகைகளை உலர வைத்து கொள்முதல் செய்தவற்கு வசதியாக 100 நெல் கொள்முதல் நிலையங்களில் 4,000 சதுரடி பரப்பளவில் தலா ரூபாய் 13 இலட்சம் வீதம் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெல் உலர்களம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் அமைக்கப்படும்.

**3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் இயந்திர கையாளுமை மற்றும் மூட்டை தைத்தல் போன்ற பணிகள் மின்தடையால் ஏற்படும் பாதிப்பினை தவிர்க்க 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் ஆக்கிகள் நிறுவப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பொது விநியோகத்திட்டத்திற்கான நகர்வுகள் அதாவது பொருட்களை லாரியில் ஏற்றுதல் மற்றும் இறக்குதல், அட்டியிடுதல் மூட்டை தைத்தல் போன்ற பணிகள் மனித உழைப்பினைக் கொண்டு தொழிலாளர்களால் கையாளப்படுகின்றன, மனித ஆற்றலினால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்த்திடவும், தொழிலாளர்கள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டும் தற்பொழுது கிடங்கு பகுதிகளில் மின்தடை ஏற்படும் தருணங்களில் இயந்திர கையாளுமை மற்றும் தைத்தல் போன்ற

பணிகள் பாதிப்படைவதை தவிர்க்கும் பொருட்டு 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் ஆக்கிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் நிறுவப்படும்.

## 4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்புகள் உருவாகாமல் தடுக்கும் வகையில் நில எல்லையில் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பு சுற்றுச்சுவர்கள் கட்டப்படும்

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு வளாகங்களின் நில பாதுகாப்பினை கருத்தில் கொண்டும் ஆக்கிரமிப்புகளை தடுக்கும் நோக்கத்துடனும் முன்னுரிமை அடிப்படையில் நில ஆக்கிரமிப்பு பிரச்சனைக்குள்ளான கிடங்கு வளாகங்களில் மனையின் பரப்பளவு எல்லையில் 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதுகாப்பு சுற்றுச்சுவர் (Compound Wall) நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

**5\. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பயன்பாட்டில் இருந்து வரும் கிடங்குகளில் பழைய கடப்பாகல் தரை அமைப்பினை மாற்றி 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன அமைப்பிலான சிமெண்ட் கான்கிரீட் தரை அமைக்கப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள பழமையான கிடங்குகளில் கடப்பாகல் தரை அமைப்புகள் முற்றிலுமாக சேதமடைந்து மேடு பள்ளமாக இருப்பதால் தரையில் உள்ள தானியங்களை சுத்தம் செய்யவும், தானிய பைகளை அட்டியிடவும் சிரமமாக உள்ளதாலும், தானிய இழப்பு ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு கிடங்குகளின் சேதமடைந்த கடப்பாகல் தரை அமைப்புகளை முற்றிலுமாக அகற்றிவிட்டு 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன அமைப்பிலான சிமெண்ட் கான்கிரீட் தரை நபார்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

**6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 13 நவீன அரிசி ஆலைகளில் 25 ஆண்டுகள் பழமையான பழுதடைந்த மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் பயன்பாட்டில் உள்ளன. அவை சிமெண்ட் கான்கிரீட் தளத்துடன் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளாக 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அரிசி ஆலைகளில் புழுங்கல் அரிசி அரவை செய்திடவும் மற்ற தேவைகளுக்கும் தண்ணீர் மிக அவசியமானதாகும். அதை சேமித்து வைக்கும் தற்போது உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் சுமார் 25 முதல் 35 வருடங்கள் வரை பழமைவாய்ந்து பழுதாகி இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அரவை செய்யும் பணி பாதிப்பிற்குள்ளாகிறது. எனவே, 13 ஆலைகளில்

உள்ள பழைய மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை அகற்றி புதியதாக 1,00,000 லிட்டர் நீர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் மாற்றியமைக்கப்படும்.

**7. திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு 200 எண்ணிக்கையிலான ஈரப்பதமானிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு 200 எண்ணிக்கையிலான ஈரப்பதமானிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

8. கிடங்குகளில் உணவு தானியப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் மாலை நேரப் பூச்சிகள் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு 600 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் உணவு தானிய பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் உள்ள உணவு தானியங்களை சேதப்படுத்தும் பூச்சிகள் அட்டிகளில் இருந்து மாலை நேரம் வெளி வருவதனை புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகளில் உள்ள விளக்கு அதனை ஈர்ப்பதால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இயலும். மேலும், பூச்சிக்கொல்லி மருந்து கொள்முதல் செய்வதனை குறைத்து புற ஊதாக் கதிர் விளக்குப் பொறிகள்

மூலம் பூச்சிகளை கட்டுக்குள் கொண்டு வருவது அவசியமாகிறது. எனவே 600 எண்ணிக்கையிலான புற ஊதாக் கதிர் விளக்கு பொறிகள் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

**9. கிடங்குகள், திறந்த வெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உணவு தானியங்களை பாதுகாப்பாக சேமிப்பதற்கும் மற்றும் காற்றோட்டமான வசதி அமைந்திட 20,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச் செருகு கட்டைகள் (Poly Pallet) 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சொந்த கிடங்குகள் மற்றும் வாடகை கிடங்குகள், திறந்த வெளி சேமிப்பு மையங்கள் மற்றும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் சேமிக்கப்படும் உணவு தானியங்களை தரைக்கும், உணவு தானிய அட்டிகளுக்கும் இடையே மூட்டை இடைச் செருகு கட்டைகள் (Poly Pallet) ஈரகாப்பு மரக்கூளங்களாக (Dunnage) பயன்படுத்தும் போது சிறந்த காற்றோட்ட வசதிக்கும், உணவு தானிய பொருட்கள் தரம் குறையாமல் சேமிப்பதற்கும் வழிவகை செய்கிறது.

எனவே, 20,000 எண்ணிக்கையிலான மூட்டை இடைச் செருகு கட்டைகள் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

**10. உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையில் உள்ள சென்னை மாநகர துணை ஆணையாளர், உதவி ஆணையாளர், மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகங்களுக்கு 1.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 340 எண்ணிக்கையிலான மேசைக்கணினிகள் (Desktop) வழங்கப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாட்டில் பொது விநியோகத்திட்டம் முழு கணினிமயாக்கப்பட்டு மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் அன்றாடம் குடும்ப அட்டைகளில் ஏற்படும் முகவரி மாற்றம், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், நீக்கல், குடும்ப அட்டை இரத்து உள்ளிட்ட அனைத்து மாற்றங்களையும் இணைய வழி (Online) மூலம் மேம்படுத்துவதற்கும், அத்தியாவசியப் பண்டங்களின் ஒதுக்கீடு, நகர்வு / நுகர்வு விவரங்களை இணைய வழி மூலம் தொடர்

கண்காணிப்பில் கொண்டு வருவதற்கும் ஏதுவாக உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையில் உள்ள சென்னை மாநகர துணை ஆணையாளர், உதவி ஆணையாளர், மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகங்களுக்கு 1.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 340 எண்ணிக்கையிலான மேசைக்கணினிகள் (Desktop) அரசு நிதியில் வழங்கப்படும்.

**11. பொது விநியோகத்திட்ட செயல்பாடுகளை கண்காணிக்க உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையில் பணிபுரியும் 128 களப்பணியாளர்களுக்கு 6 லட்சத்து 14 ஆயிரத்து 400 ரூபாய் மதிப்பீட்டில் குறிப்பிட்ட பயனாளர் குழுமம் - செறிவட்டை (CUG-SIM CARD) வழங்கப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பொது விநியோகத்திட்ட செயல்பாடுகளை கண்காணிக்கும் விதமாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கண்காணிப்பாளர் நிலையில் பணிபுரியும் 49 பணியாளர்கள் மற்றும் தணிக்கை ஆய்வாளர் நிலையில் உள்ள 79 பணியாளர்கள், ஆக மொத்தம் 128 களப்பணியாளர்களுக்கு ரூ. 400/- கட்டண வீதத்தில் குறிப்பிட்ட பயனாளர் குழுமம் - செறிவட்டை (CUG-SIM CARD) ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 6,14,400/- மதிப்பீட்டில் அரசு நிதியில் வழங்கப்படும்.

## 12. முதியோர் ஒய்வூதிய திட்ட (OAP) மற்றும் அன்னப்பூர்ணா திட்டப் (ANP) பயனாளிகளுக்கு 48.51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4,30,465 மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்படும்

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாட்டில் தற்போது 4,21,165 முதியோர் ஒய்வூதிய திட்டப் (OAP) பயனாளிகளும் மற்றும் 9,300 அன்னப்பூர்ணா திட்டப் (ANP) பயனாளிகளும் ஆக மொத்தம் 4,30,465 பயனாளிகள் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் முறையே தலா 5 கிலோ மற்றும் 10 கிலோ அரிசி பெற்று பயன் அடைந்து வருகின்றனர். அவர்களுக்கு மற்ற குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கியது போல மின்னணு குடும்ப அட்டைகள் ரூபாய் 48.51 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிதியில் வழங்கப்படும்.

## 13. தமிழ்நாட்டில் இளம் நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு தகவல்களை கொண்டு சென்றிட 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நுகர்வோருக்கான விழிப்புணர்வு மேம்படுத்தப்படும்

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாட்டில் பள்ளி / கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான கண்காட்சி கருத்தரங்கம் மற்றும் பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிட நுகர்வோர் நல நிதியிலிருந்து ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் நுகர்வோர் விழிப்புணர்வு மேம்படுத்தப்படும்.

**14. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் 60 சேமிப்பு கிடங்குகளிலும், பணியாற்றும் பணியாளர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு விரல் ரேகை (Bio-metric) முறையிலான வருகைப்பதிவேடு திட்டம் செயல்படுத்தப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் அனைத்து சேமிப்பு கிடங்குகளிலும் பணியாற்றும் ஊழியர்களின் வருகையினை கண்காணிக்க மின்னணு விரல் ரேகை (Bio-metric) வருகைப் பதிவேடு திட்டத்தை 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிதியில் செயல்படுத்தப்படும்.

**15. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் 60 சேமிப்பு கிடங்குகளிலும், சேமித்து வைக்கப்படும் சரக்குகளை பாதுகாத்திட 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறைகாணிகள் (CCTV) நிறுவப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ள அத்தியாவசிய பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு மறைகாணிகள் (CCTV) 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிதியில் நிறுவப்படும்.

**16. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் 60 சேமிப்பு கிடங்குகள், மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து ஊழியர்களின் குடியிருப்புகளில் மின்சாரம் சேமிக்கும் பொருட்டு குழாய் வடிவ விளக்குகளை 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒளிர்விமுனை (LED) விளக்குகளாக மாற்றியமைக்கப்படும்**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மண்டல அலுவலகங்கள் மற்றும் சேமிப்பு கிடங்குகளிலும் இதனை சார்ந்த ஊழியர்கள் குடியிருப்புகளிலும் மின்சாரத்தினை சேமிக்கும் பொருட்டு தற்போது பயன்பாட்டில் உள்ள குழாய் வடிவ ஒளிரும் விளக்குகள் அனைத்தையும் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒளிர்விமுனை (LED) விளக்குகளாக தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிதியில் மாற்றியமைக்கப்படும்.

**இரா. காமராஜ்**

உணவு மற்றும் நுகர்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

# நன்றி!